நாள்: 20.07.2022

மொழியியல் புலம்

நடத்தும்

# தமிழ் இலக்கண மரபில் காலந்தோறும் தொடரியல் கோட்பாடுகள்

பயிலரங்கம் – 5

(29.07.2022 - 04.08.2022)

## அறிவிப்பும் அழைப்பும்

தொல்காப்பியச் ‘**சொல்லதிகாரம்**’ தொடரியல் இலக்கணத்தை வகுத்துக் கூறுவது என்று சேனாவரையர் குறிப்பிடுகின்றார். சொல்லதிகாரத்தின் **கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எச்சவியல்** முதலான இயல்கள் இன்றைய மொழியியலாளர்கள் வலியுறுத்தும் தொடரியல் கோட்பாடுகளைக் கொண்டிருப்பது சுட்டத்தக்கதாகும். மொழியியல் அறிஞர்கள் மொழியின் இயல்பையும் அதன் அமைப்பையும் ஆராய்வதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். தொல்காப்பியர் தமதுகால வழக்காறுகளையும் தொடரியல் கோட்பாடுகளையும் விளக்கியிருப்பதோடு தொடரியல் கோட்பாடுகளையும் வரையறுத்துக் காட்டியுள்ளார். தொடரியல் என்பது மொழியிலுள்ள வாக்கியங்களின் அமைப்பினை விளக்குவதாகும். ஒரு மொழியின் தொடரமைப்பை உருவாக்குவதற்கு அம்மொழியின் சொற்கள் பெரிதும் உதவுகின்றன. சொற்கள் வாக்கியங்களில், குறிப்பிட்ட ஓர் ஒழுங்கு முறையில் வருவனவாகும்.

வாக்கியங்களின் அமைப்பை விளக்குவதற்கு அவ்வாக்கியங்களில் உள்ள சொற்கள், அவற்றின் பாகுபாடு, சொற்றொடர்களின் வகைகள் ஆகியவற்றை ஆராய்தல் வேண்டும். வாக்கியங்கள் தொடர்களாலும், சொற்களாலும் ஆனவை. வாக்கியத்தின் முக்கிய உறுப்பு தொடர்களே ஆகும். இலக்கண வழுவற்ற வாக்கியங்கள்

உருவாக்குவதற்குத் தொடரியல் இலக்கணம் இன்றியாமையாததாக அமைகிறது. பொருள் மயக்கத்தையும் தொடரியலையும் இலக்கணம் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வகையில் தமிழ் இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ள தொடரியல் கோட்பாடுகளையும், அவை காலந்தோறும் அடைந்து வந்துள்ள மாற்றங்களையும், வளர்ச்சி நிலைகளையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவது மிகவும் தேவையாகிறது.

தமிழ் இலக்கண மரபில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரும் பின்னரும் தமிழ்த் தொடரியல் கோட்பாடுகள் பெற்றுள்ள மாற்றங்களையும், வளர்ச்சி நிலைகளையும் ஆராயவேண்டியதும் தற்கால ஆய்வுக்கு இன்றியமையாததாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன மொழியியல் புலத்தின் சார்பாகத் **‘தமிழ் இலக்கண மரபில் காலந்தோறும் தொடரியல் கோட்பாடுகள்’** என்னும் தலைப்பிலான பயிலரங்கம் ஒன்றினை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிலரங்கில் மொழியியல், தமிழியல் ஆகிய துறைகளில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவ/மாணவியர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம். மொழியியல் அறிஞர்கள், பன்மொழி அறிவுப் புலமைப் பெற்றுள்ள அறிஞர்கள் ஆய்வுரைகளும் பயிற்சியும் வழங்க உள்ளனர்.

பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் பின்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: 25.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 29.07.2022 முதல் 04.08.2022 முடிய ஏழு நாட்கள்
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 01.00 & மாலை 02.00 – 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopl@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல்

வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/ அலைப்பேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.

8. பயிலரங்க கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதிநாள் 26.07.2022. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு 26.07.2022 அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

# தமிழ் இலக்கண மரபில் காலந்தோறும் தொடரியல் கோட்பாடுகள்

(29.07.2022 - 04.08.2022)

## பயிலரங்கம் - 5

### விண்ணப்பப் படிவம்

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெயர்<br>Name</td><td colspan="5">தமிழ்/ Tamil</td><td colspan="2" rowspan="4">நிழற்படம்<br>[Photo]</td></tr>
<tr><td colspan="5">ஆங்கிலம்/ English</td></tr>
<tr><td>2.</td><td>பிறந்த நாள் / வயது|<br>Age / Day of Birth</td><td colspan="5"></td></tr>
<tr><td>3.</td><td>பாலினம் | Gender</td><td colspan="5"></td></tr>
<tr><td>4.</td><td colspan="2">வகுப்பு | Class</td><td>பொது|<br>General</td><td></td><td>இ.பி.வ.|<br>OBC</td><td></td><td>பட்டியல் இனம்<br>| SC. ST</td><td></td></tr>
<tr><td>5.</td><td colspan="2">கல்வித் தகுதி | Educational Qualification</td><td colspan="6"></td></tr>
<tr><td>6.</td><td colspan="2">ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு |<br>M. Phil / Ph.D. – Date of joining/year</td><td colspan="6"></td></tr>
<tr><td>7.</td><td colspan="2">ஆய்வியல் நிறைஞர்/ முனைவர் பட்டப் ஆய்வுத் தலைப்பு | M. Phil / Ph.D. Research Topic</td><td colspan="6"></td></tr>
<tr><td>8.</td><td colspan="2">பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைப்பேசி/ மின்னஞ்சல் | University / College / Address (Phone / Email)</td><td colspan="6"></td></tr>
<tr><td>9.</td><td colspan="2">இல்ல முகவரி (தொலைபேசி)<br>| Home address (Phone)</td><td colspan="6"></td></tr>
<tr><td>10.</td><td colspan="2">புலன எண் | WhatsApp number</td><td colspan="6"></td></tr>
<tr><td rowspan="2">11.</td><td colspan="2" rowspan="2">செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | Did you attend the workshop conducted by the CICT this academic year? If yes, please give details</td><td colspan="6">ஆம் | Yes<br>இல்லை| No</td></tr>
<tr><td colspan="6"></td></tr>
</table>

நாள்: (கையொப்பம்)

இடம்:

நெறியாளர் /துறைத் தலைவர்/ முதல்வர்/ பதிவாளர்
உரிய முத்திரையுடன்